THE NEW INDIAN EXPRESS

# Min to dedicate EMS block to nation today

Puducherry: The renovated Emergency Medicine and Trauma Care (EMS) Block at the Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (JIPMER), Puducherry, will be formally dedicated to the nation on Tuesday by Union Minister of State for Health and Family Welfare(Independent Charge) Prataprao Jadhav. The block has undergone a major renovation and technological upgrade, executed by the Central Public Works Department at a cost of ₹4.74 crore, a release from JIPMER said. ENS

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
27.5.2025 (செவ்வாய்க்கிழமை)

### ரூ.4¾ கோடியில் புனரமைக்கப்பட்ட

# ஜிப்மர் அவசர சிகிச்சை பிரிவு

## இன்று பயன்பாட்டுக்கு வருகிறது

புதுச்சேரி, மே.27-

புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள ஜிப்மர் ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சை பிரிவு ரூ.4 கோடியே 74 லட்சம் மதிப்பில் புனரமைக்கப்பட்டது. இங்கு நாள்தோறும் 350 முதல் 400 பேருக்கு அவசர சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அவசர சிகிச்சை பிரிவு இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு பயன் பாட்டுக்கு வந்து நோயாளிகளுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது.

நிகழ்ச்சியில் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை மந்திரி பிரதாப்ராவ் ஜாதவ் கலந்துகொண்டு புனரமைக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை பிரிவை திறந்து வைக்கிறார். நிகழ்ச்சியில் கவர்னர் கைலாஷ்நாதன், முதல்-அமைச்சர் ரங்கசாமி மற்றும் எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் கலந்துகொள் கிறார்கள்.

தினகரன்
மே 27, 2025 செவ்வாய்க்கிழமை

# ரூ.4.74 கோடி மதிப்பில் ஜிப்மரில் புதுப்பிக்கப்பட்ட அவசர சிகிச்சை பிரிவு

## மத்திய அமைச்சர் இன்று திறந்து வைக்கிறார்

புதுச்சேரி, மே 27: ஜிப்மரில் ரூ.4.74 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்ட அவசர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சை பிரிவை மத்திய அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் இன்று மக்கள் சேவைக்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

புதுச்சேரி கோரிமேட்டில் மத்திய அரசு நிறுவனமான ஜிப்மர் மருத்துவமனை இயங்கி வருகிறது. இங்குள்ள அவசர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சை பிரிவு சுமார் ரூ.4.74 கோடி மதிப்பில் தற்போது புனரமைக்கப்பட்டு உள்ளது. இந்த வளாகம் மேம்படுத்தப்பட்ட தீயணைப்பு பாதுகாப்பு அம்சங்களுடன் மத்திய பொதுப்பணித்துறையால் வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போதைய அவசர சிகிச்சை பிரிவு நாட்டின் முதல் நிலை விபத்து சிகிச்சை மையமாக நிர்வகிக்கப்பட்டுள்ளது. மேலும் நாள் ஒன்றுக்கு சுமார் 350-400 அவசர சிகிச்சை நோயாளிகளை கையாளும் வசதிகளை கொண்டுள்ளது. இந்த மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு மூலம் மேம்படுத்தப்பட்ட நோயாளிகள் பராமரிப்பு, செயல்திறன் மற்றும் அவசரகால தயார் நிலை ஆகியவற்றை முக்கிய நோக்கமாக கொண்டு வடிமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் புனரமைக்கப்பட்ட அவசர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சை பிரிவை மக்கள் சேவைக்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சி இன்று காலை 10 மணிக்கு நடக்கிறது. இதில் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை மற்றும் ஆயுஷ் (தனி பொறுப்பு) துறை இணையமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் கலந்து கொண்டு புதுப்பிக்கப்பட்ட அவசர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சைப் பிரிவை நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் கவர்னர் கைலாஷ்நாதன், முதல்வர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம், எம்பிக்கள் செல்வகணபதி, வைத்திலிங்கம், ஏ.கே.டி. ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.